No. of Printed Pages : **31**

# 4207 (NS)

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## PART - III

# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given four alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியுள்ள சொத்துகள் :

(அ) நட்டம் (ஆ) ரொக்கம் (இ) முதல் (ஈ) இலாபம்

The excess of assets over liabilities is :

(a) Loss (b) Cash (c) Capital (d) Profit

2. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது :

(அ) மொத்த கடனாளிகள் க/கு

(ஆ) மொத்த கடனீந்தோர் க/கு

(இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு

(ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு

The amount of credit sales can be computed from :

(a) Total debtors account

(b) Total creditors account

(c) Bills receivable account

(d) Bills payable account

3. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு :

(அ) பெயரளவு க/கு (ஆ) சொத்து க/கு

(இ) ஆள்சார் க/கு (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் க/கு

Receipts and Payments account is a :

(a) Nominal Account (b) Real Account

(c) Personal Account (d) Representative Personal Account

4. குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை :

(அ) வருவாயின வரவு (ஆ) முதலின வரவு

(இ) வருவாயின செலவு (ஈ) முதலினச் செலவு

Donations received for a specific purpose is :

(a) Revenue receipt (b) Capital receipt

(c) Revenue expenditure (d) Capital expenditure

5. உபரி அல்லது பற்றாக்குறை என முடியும் க/கு :

(அ) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் க/கு

(ஆ) வருவாய் மற்றும் செலவினக் க/கு

(இ) வியாபார க/கு

(ஈ) இலாப - நட்டக் க/கு

Which Account ends with surplus or deficit ?

(a) Receipts and Payments Account

(b) Income and Expenditure Account

(c) Trading Account

(d) Profit and Loss Account

6. பின்வருவனவற்றில் எது இலாப நட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும் ?

(அ) அலுவலகச் செலவுகள் (ஆ) பணியாளர் ஊதியம்

(இ) கூட்டாளியின் ஊதியம் (ஈ) வங்கிக்கடன் மீது வட்டி

Which of the following is shown in profit and loss appropriation account ?

(a) Office expenses (b) Salary of staff

(c) Partner's salary (d) Interest on bank loan

7. பின்வருவனவற்றில் எது **சரியற்ற** இணை ?

(அ) எடுப்புகள் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்

(ஆ) முதல் மீது வட்டி - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்

(இ) கடன் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்

(ஈ) இலாப பகிர்வு - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்

Which of the following is **incorrect** pair ?

(a) Interest on drawings - Debited to capital account

(b) Interest on capital - Credited to capital account

(c) Interest on loan - Debited to capital account

(d) Share of profit - Credited to capital account

**8.** சராசரி இலாபம் ₹ 25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹ 15,000 ஆக இருக்கும்போது உயர் இலாபம் :

(அ) ₹ 25,000 (ஆ) ₹ 5,000 (இ) ₹ 10,000 (ஈ) ₹ 15,000

When the average profit is ₹ 25,000 and the normal profit is ₹ 15,000, super profit is :

(a) ₹ 25,000 (b) ₹ 5,000 (c) ₹ 10,000 (d) ₹ 15,000

**9.** நற்பெயரை __________ முறைகளில் மதிப்பிடலாம்.

(அ) 2 (ஆ) 3 (இ) 4 (ஈ) 5

__________ methods are there to value goodwill.

(a) 2 (b) 3 (c) 4 (d) 5

**10.** மறுமதிப்பீட்டுக் க/கு ஒரு :

(அ) சொத்து க/கு (ஆ) பெயரளவு க/கு

(இ) ஆள்சார் க/கு (ஈ) ஆள்சாரா க/கு

Revaluation A/c is a :

(a) Real A/c (b) Nominal A/c

(c) Personal A/c (d) Impersonal A/c

[ திருப்புக / Turn over

**11.** எது **சரியான** இணை ?

(அ) புதிய கூட்டாளி சேர்ப்பு - ஆதாய விகிதம்

(ஆ) பழைய கூட்டாளி விலகல் - தியாக விகிதம்

(இ) நற்பெயர் - கற்பனைச் சொத்து

(ஈ) இந்திய கூட்டாண்மை சட்டம் - 1932

Which of the following is **correct** pair ?

(a) Admission of New Partner - Gaining Ratio

(b) Retirement of Old Partner - Sacrificing Ratio

(c) Goodwill - Fictitious Asset

(d) Indian Partnership Act - 1932

**12.** மறுமதிப்பீட்டின் போது பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது :

(அ) ஆதாயம் (ஆ) நட்டம்

(இ) இலாபம் (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

On revaluation, the increase in liabilities leads to :

(a) Gain (b) Loss

(c) Profit (d) None of these

**13.** பின்வருவனவற்றில் எது அரசு நிறுவனம் **அல்ல** ?

(அ) இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்

(ஆ) பாரத மிகுமின் நிறுவனம்

(இ) இன்ஃபோசிஸ் வரையறு நிறுமம்

(ஈ) தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

Which of the following is **not** a Government Organisation ?

(a) Indian Oil Corporation Ltd.

(b) Bharath Heavy Electricals Limited

(c) Infosys Limited

(d) Tamil Nadu Newsprint and Papers Ltd.

**14.** முகமதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு :

(அ) பத்திர முனைமக் கணக்கு (ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு

(இ) பங்கு முதல் கணக்கு (ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

The amount received over and above the par value is credited to :

(a) Securities premium account (b) Calls in advance account

(c) Share capital (d) Forfeited shares account

**15.** நிதி என்னும் சொல் குறிப்பிடுவது :

(அ) நடப்புப் பொறுப்புகள் (ஆ) நடைமுறை முதல்

(இ) நிலைச் சொத்துகள் (ஈ) நீண்ட காலச் சொத்துகள்

The term 'Fund' refers to :

(a) Current liabilities (b) Working capital

(c) Fixed assets (d) Non-current assets

**16.** ஒப்பு நோக்கு அறிக்கை __________ பத்திகளைக் கொண்டது.

(அ) 3 (ஆ) 4 (இ) 5 (ஈ) 6

A comparative statement has __________ columns.

(a) 3 (b) 4 (c) 5 (d) 6

**17.** பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துகளுக்கும் உள்ள விகிதாச்சாரம் :

(அ) உரிமையாளர் விகிதம் (ஆ) முதல் உந்து திறன் விகிதம்

(இ) புற அகபொறுப்பு விகிதம் (ஈ) நடப்பு விகிதம்

Proportion of shareholder's funds to total asset is called :

(a) Proprietary ratio (b) Capital gearing ratio

(c) Debt equity ratio (d) Current ratio

18. நடப்புச் சொத்துகள் ₹ 12,000; நடப்பு பொறுப்புகள் ₹ 6,000; எனில் நடப்பு விகிதம் :

(அ) 1 : 2 (ஆ) 2 : 1 (இ) 1 : 1 (ஈ) 2 : 2

Current Assets ₹ 12,000; Current liabilities ₹ 6,000; Current ratio is :

(a) 1 : 2 (b) 2 : 1 (c) 1 : 1 (d) 2 : 2

19. சம்பளக் கணக்கு பின்வரும் எந்த தலைப்பின் கீழ் வரும் ?

(அ) நேரடி வருமானங்கள் (ஆ) நேரடிச் செலவினங்கள்

(இ) மறைமுக வருமானங்கள் (ஈ) மறைமுக செலவினங்கள்

Salary account comes under which of the following head ?

(a) Direct Incomes (b) Direct Expenses

(c) Indirect Incomes (d) Indirect Expenses

20. பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் கணக்கியல் அறிக்கையானது :

(அ) வழக்கமான கணக்கியல் அறிக்கை

(ஆ) குறிப்பிட்ட நோக்க அறிக்கை

(இ) இருப்பாய்வு

(ஈ) இருப்புநிலைக் குறிப்பு

Accounting report prepared according to the requirements of the user is :

(a) Routine accounting report

(b) Special Purpose report

(c) Trial Balance

(d) Balance Sheet

## பகுதி - II / PART - II

**எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

Answer **any seven** questions in which question no. **30** is **compulsory**.

**21.** நிலை அறிக்கை என்றால் என்ன ?

What is a statement of affairs ?

**22.** பின்வரும் தகவல்களிலிருந்து இலாபம் அல்லது நட்டத்தை கண்டறியவும்.

| **விவரம்** | **₹** |
|---|---|
| 2018 சனவரி 1 அன்று முதல் | 2,20,000 |
| 2018 டிசம்பர் 31 அன்று முதல் | 1,80,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 40,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 50,000 |

From the following particulars ascertain profit or loss.

| **Particulars** | **₹** |
|---|---|
| Capital as on 1st January 2018 | 2,20,000 |
| Capital as on 31st December 2018 | 1,80,000 |
| Additional capital introduced during the year | 40,000 |
| Drawings made during the year | 50,000 |

**23.** ஆயுள் உறுப்பினர் கட்டணம் – சிறு குறிப்பு தரவும்.

Write a short note on life membership fees.

**24.** பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ₹ |
|---|---|
| 1.4.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 2,600 |
| அவ்வாண்டில் வாங்கிய எழுது பொருள்கள் | 6,500 |
| 31.3.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 2,200 |

Show how the following items appear in the income and expenditure account of Sirkazhi Singers Association.

| | ₹ |
|---|---|
| Stock of stationery on 1.4.2018 | 2,600 |
| Purchase of stationery during the year | 6,500 |
| Stock of stationery on 31.3.2018 | 2,200 |

**25.** இலாப நட்டப் பகிர்வு கணக்கு ஏன் தயாரிக்கப்பட வேண்டும் ?

Why is Profit and Loss appropriation account prepared ?

**26.** ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு;

| | |
|---|---|
| 2014 | ₹ 10,000; |
| 2015 | ₹ 11,000; |
| 2016 | ₹ 12,000; |
| 2017 | ₹ 13,000; |
| 2018 | ₹ 14,000 |

5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

The following are the profits of a firm in the last five years :

| | |
|---|---|
| 2014 | ₹ 10,000; |
| 2015 | ₹ 11,000; |
| 2016 | ₹ 12,000; |
| 2017 | ₹ 13,000; |
| 2018 | ₹ 14,000 |

Calculate the value of Goodwill at 2 years purchase of five years.

**27.** தியாக விகிதம் என்றால் என்ன ?

What is sacrificing ratio ?

**28.** (i) எந்த ஆண்டு Tally Solutions Tally.ERP 9 எனும் மென்பொருள் அறிமுகம் செய்தது ?

(ii) எந்த கணக்கு பதிவியல் முறையை இந்த மென்பொருள் பின்பற்றுகிறது ?

(i) In which year did Tally Solutions introduce Tally.ERP 9 ?

(ii) Which system of Book-keeping this software follows ?

**29.** பங்கு முதலின் பல்வேறு பிரிவுகளை குறிப்பிடுக.

What are the divisions of share capital ?

**30.** இலாப நோக்கமற்ற அமைப்புகளுக்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

Give four examples of Non-Profit Organisation.

## பகுதி - III / PART - III

**எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

Answer **any seven** questions in which question no. **40** is **compulsory**.

**31.** பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையை காணவும்.

| **விவரம்** | ₹ |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,00,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,30,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள் திருப்பம் | 25,000 |
| 2019 மார்ச் 31 அன்று கடனாளிகள் | 1,20,000 |

Find out credit sales from the following information.

| **Particulars** | ₹ |
|---|---|
| Debtors on $1^{st}$ April 2018 | 1,00,000 |
| Cash received from Debtors | 2,30,000 |
| Discount allowed | 5,000 |
| Returns inward | 25,000 |
| Debtors on $31^{st}$ March 2019 | 1,20,000 |

**32.** பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடவும்.

State any three differences between Receipts and Payments Account and Income and Expenditure Account.

**33.** கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹ 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர் :

(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்

(ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்

(iii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

Kavitha is a partner in a firm. She withdraws ₹ 2,500 p.m regularly. Interest on drawings is charged @ 4% p.a.

Calculate interest on drawing using average period. If she draws :

(i) at the beginning of every month

(ii) in the middle of every month

(iii) at the end of every month

**34.** நற்பெயரைத் தீர்மானிக்கும் காரணிகள் எவையேனும் மூன்றினை எழுதுக.

State any three factors determining Goodwill.

**35.** விமலா மற்றும் கமலா இருவரும் கூட்டாளிகள், 4 : 3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். வினிதா என்பவர் விமலாவிடம் 1/14 பங்கும் மற்றும் கமலாவிடமிருந்து 1/14 பங்கும் பெற்று கூட்டாண்மையில் சேருகிறார். அவர்களின் புதிய இலாப பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

Vimala and Kamala are partners, sharing profits and losses in the ratio of 4 : 3. Vinitha enters into the partnership and she acquires 1/14 from Vimala and 1/14 from Kamala. Find out the new profit sharing ratio and sacrificing ratio.

**36.** ரோஸி, ரதி மற்றும் இராணி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்கள் மற்றும் நட்டங்களை சமமாக பகிர்ந்து வந்தனர். 1.1.2018 அன்று ரதி கூட்டாண்மையிலிருந்து விலகினார். அந்நாளைய இருப்புநிலைக்குறிப்பின் சொத்துகள் பக்கம் ₹ 45,000 பகிர்ந்துத்தரா நட்டங்கள் இருப்பைக் காட்டியது. பகிர்ந்துதரா நட்டத்தை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டு பதிவினைத் தரவும்.

Rosi, Rathi and Rani are partners of a firm sharing profits and losses equally. Rathi retired from partnership on 1.1.2018. On that date, their balance sheet showed accumulated loss of ₹ 45,000 on the asset side of the balance sheet. Give the journal entry to distribute the accumulated loss.

**37.** விடுபட்ட விவரங்களைக் கொண்டு பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளை நிறைவு செய்யவும்.

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 1 | ___________<br>பங்கு விண்ணப்பக் க/கு<br>(₹ 3 வீதம் 4,00,000 பங்குகளுக்கு விண்ணப்பத் தொகை பெறப்பட்டது) | | 12,00,000 | ___________ |
| 2 | ________________<br>____________________<br>(பங்கு விண்ணப்பத் தொகை பங்கு முதலுக்கு மாற்றப்பட்டது) | | ___________ | ___________ |

Complete the following journal entries by filling the missing information.

| Date | Particulars | L.F. | Dr ₹ | Cr ₹ |
|---|---|---|---|---|
| 1 | ___________<br>To share application A/c<br>(Application money on 4,00,000 shares @ ₹ 3 per share received) | | 12,00,000 | ___________ |
| 2 | ________________<br>____________________<br>(Application money transferred to share capital A/c) | | ___________ | ___________ |

38. டேனியல் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2015-16 ₹ | 2016-17 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 40,000 | 50,000 |
| இயக்கச் செலவுகள் | 25,000 | 27,500 |
| வருமான வரி % (வரிக்கு முன்னர் உள்ள இலாபத்தில்) | 30 | 30 |

From the following particulars, prepare comparative income statement of Daniel Ltd.

| Particulars | 2015-16 ₹ | 2016-17 ₹ |
|---|---|---|
| Revenue from operation | 40,000 | 50,000 |
| Operating expenses | 25,000 | 27,500 |
| Income tax (% of the profit before tax) | 30 | 30 |

39. கணக்கியல் சான்றாவணம் குறித்து சிறு குறிப்பு எழுதவும்.

Write a brief note on accounting Vouchers.

40. இலாப தன்மை விகிதங்கள் யாவை ? அவை எவ்வகையில் வெளிப்படுத்தப்-படுகின்றன ?

Name the profitability ratios. How are these ratios expressed ?

## பகுதி - IV / PART - IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

Answer **all** the questions.

**41.** (அ) 2018 ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ₹ 1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. 2019 மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வங்கி மேல் வரைப்பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கை ரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்கு ₹ 30,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

**அல்லது**

(ஆ) கணக்கியல் தகவல் அமைப்பு எவ்வாறு பிற தகவல் அமைப்புகளுக்கு உதவுகிறது ? விளக்குக.

(a) On 1st April 2018 Subha started her business with a capital of ₹ 1,20,000. She did not maintain proper book of accounts. Following particulars are available from her books as on 31.3.2019.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Bank overdraft | 50,000 | Stock-in-trade | 1,60,000 |
| Debtors | 1,80,000 | Creditors | 90,000 |
| Bills Receivable | 70,000 | Bills payable | 2,40,000 |
| Computer | 30,000 | Cash in hand | 60,000 |
| Machinery | 3,00,000 | | |

During the year she withdrew ₹ 30,000 for her personal use. She introduced further capital of ₹ 40,000 during the year. Calculate her profit or loss.

**OR**

(b) How accounting information system helps the other information system ? Explain.

42. (அ) கீழ்க்காணும் திருச்சி மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினை தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | அறைகலன் வாங்கியது | 10,000 |
| கை ரொக்கம் | 11,000 | வாடகை | 2,800 |
| பங்காதாயம் பெற்றது | 27,600 | செயலர் மதிப்பூதியம் | 15,000 |
| பழைய செய்தித்தாள் விற்றது | 3,000 | தபால் செலவுகள் | 1,700 |
| உறுப்பினர் சந்தா | 31,000 | பொதுச் செலவுகள் | 4,350 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | 8,000 | அச்சு மற்றும் எழுது | |
| | | பொருள்கள் | 45,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 1,250 | தணிக்கைக் கட்டணம் | 5,000 |
| அறைகலன் விற்றது | 5,000 | இறுதி இருப்பு | |
| (ஏட்டு மதிப்பு ₹ 4,400) | | கை ரொக்கம் | 3,000 |
| | 86,850 | | 86,850 |

**அல்லது**

(ஆ) டெரிக்ஸ்டன் நிறுமத்தின் பின்வரும் இலாப-நட்ட அறிக்கையிலிருந்து :

(i) மொத்த இலாப விகிதம்

(ii) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்

டெரிக்ஸ்டன் நிறுமத்தின் இலாப-நட்ட அறிக்கை

| விவரம் | ₹ |
|---|---|
| I விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 24,00,000 |
| II இதர வருமானம் : | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 70,000 |
| III மொத்த வருவாய் (I+II) | 24,70,000 |
| IV செலவுகள் : | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 18,80,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | (–) 80,000 |
| பணியாளர் நலன்களுக்கான செலவுகள் | 2,90,000 |
| இதர செலவுகள் | 1,10,000 |
| வரி ஒதுக்கு | 30,000 |
| மொத்த செலவுகள் | 22,30,000 |
| V அவ்வாண்டின் இலாபம் | 2,40,000 |

(a) From the following Receipts and Payment Account of Trichy Recreation Club, Prepare Income and Expenditure Account for the year ended 31.03.2018.

| Receipts | ₹ | Payments | ₹ |
|---|---|---|---|
| To opening balance | | By Furniture purchased | 10,000 |
| Cash in hand | 11,000 | By Rent | 2,800 |
| To Dividend received | 27,600 | By Secretary's honararium | 15,000 |
| To Sale of old Newspaper | 3,000 | By Postage | 1,700 |
| To Member's subscription | 31,000 | By General expenses | 4,350 |
| To Locker rent | 8,000 | By Printing and Stationery | 45,000 |
| To Interest on investment | 1,250 | By Audit fees | 5,000 |
| To sale of furniture | 5,000 | By closing balance | |
| (Book value ₹ 4,400) | | Cash in hand | 3,000 |
| | 86,850 | | 86,850 |

**OR**

(b) From the following statement of profit and loss of Dericston Ltd. calculate :

(i) Gross Profit Ratio

(ii) Net Profit Ratio

Statement of Profit and Loss

| **Particulars** | ₹ |
|---|---|
| I Revenue from operations | 24,00,000 |
| II Other Income : | |
| Income from investment | 70,000 |
| III Total revenues (I+II) | 24,70,000 |
| IV Expenses : | |
| Purchase of stock-in-trade | 18,80,000 |
| Changes in inventories | (–) 80,000 |
| Employee benefits expenses | 2,90,000 |
| Other expenses | 1,10,000 |
| Provision for tax | 30,000 |
| Total expenses | 22,30,000 |
| V Profit for the year | 2,40,000 |

**43.** (அ) பின்வரும் தகவல்களிலிருந்து சாந்தி மற்றும் சுமதி என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல் நிலை முதலாக இருக்கும் போது தயாரிக்கவும்.

| விவரம் | சாந்தி ₹ | சுமதி ₹ |
|---|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று முதல் | 1,00,000 | 80,000 |
| 2018 ஜனவரி 1 அன்று நடப்புக் கணக்கு (வ) | 5,000 | 3,000 |
| 2018 ஜூன் 1 கூடுதல் முதல் கொண்டு வந்தது | 10,000 | 20,000 |
| 2018 ஆம் ஆண்டின் எடுப்புகள் | 20,000 | 13,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 500 | 300 |
| 2018 -ல் இலாப பங்கு | 10,000 | 8,000 |
| முதல் மீது வட்டி | 6,300 | 5,400 |
| ஊதியம் | 9,000 | - |
| கழிவு | - | 1,200 |

**அல்லது**

(ஆ) மீனா நிறுமத்தின் 2018 மார்ச் 31 -ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| | விவரம் | 2018 மார்ச் 31 ₹ |
|---|---|---|
| I | பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| | பங்குதாரர் நிதி | 2,00,000 |
| | நீண்டகாலப் பொறுப்புகள் | 1,60,000 |
| | நடப்புப் பொறுப்புகள் | 40,000 |
| | மொத்தம் | 4,00,000 |
| II | சொத்துகள் | |
| | நீண்ட காலச் சொத்துகள் | 3,00,000 |
| | நடப்புச் சொத்துகள் | 1,00,000 |
| | மொத்தம் | 4,00,000 |

(a) From the following information, prepare capital accounts of partners Shanthi and Sumathi, when their capitals are fixed.

| Particulars | Shanthi ₹ | Sumathi ₹ |
|---|---|---|
| Capital on 1st January 2018 | 1,00,000 | 80,000 |
| Current account on 1st January 2018 (Cr) | 5,000 | 3,000 |
| Additional Capital introduced on 1st June 2018 | 10,000 | 20,000 |
| Drawings during 2018 | 20,000 | 13,000 |
| Interest on drawings | 500 | 300 |
| Share of Profit for 2018 | 10,000 | 8,000 |
| Interest on Capital | 6,300 | 5,400 |
| Salary | 9,000 | Nil |
| Commission | Nil | 1,200 |

**OR**

(b) Prepare common-size balance sheet of Meena Ltd. as on 31st March, 2018.

| Particulars | 31st March 2018 ₹ |
|---|---|
| I EQUITY AND LIABILITIES | |
| Shareholder's funds | 2,00,000 |
| Non-current liabilities | 1,60,000 |
| Current liabilities | 40,000 |
| Total | 4,00,000 |
| II ASSETS | |
| Non-current assets | 3,00,000 |
| Current assets | 1,00,000 |
| Total | 4,00,000 |

**44.** (அ) ஆகாஷ், பாலா, சந்துரு மற்றும் டேனியல் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள் ?

(i) ஆகாஷ் என்பவர் அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.

(ii) பாலா ஒவ்வொரு மாதமும் ₹ 3,000 எடுத்துக் கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் பாலாவிடம் ஆண்டுக்கு 8% எடுப்புகள் மீது வட்டி நிறுவனத்திற்கு அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால் பாலா அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

(iii) ஆகாஷ் இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் பிற கூட்டாளிகள் அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

(iv) டேனியல் தனது முழுநேரத்தையும் தொழிலில் செலவிடுவதால் அவர் ஒவ்வொரு மாதமும் ₹ 10,000 ஊதியம் வேண்டுமென்று கோருகிறார்.

(v) சந்துருவால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் ₹ 50,000. அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 12% வேண்டுமென்று கோருகிறார்.

**அல்லது**

(ஆ) இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் ஜேம்ஸ் மற்றும் ஜஸ்டினாவின் 1.1.2017 -ம் நாளன்றைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | கட்டடம் | 70,000 |
| ஜேம்ஸ் | 40,000 | | சரக்கிருப்பு | 30,000 |
| ஜஸ்டினா | 50,000 | 90,000 | கடனாளிகள் | 20,000 |
| | | | வங்கி ரொக்கம் | 15,000 |
| கடனீந்தோர் | | 35,000 | முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு | 5,000 |
| காப்பு நிதி | | 15,000 | | |
| | | 1,40,000 | | 1,40,000 |

மேற்கூறிய நாளில் பாலன் என்பவரை எதிர்கால இலாபத்தில் 1/5 பங்கிற்கு பின்வரும் விவரங்கள் அடிப்படையில் கூட்டாளியாக சேர்த்தனர்.

(i) பாலன் ₹ 25,000 முதல் கொண்டு வந்தார்.

(ii) நற்பெயரில் அவருடைய பங்காக ₹ 10,000 ரொக்கமாக கொண்டு வந்தார்.

(iii) சொத்துகள் கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்பட்டன : கட்டடம் ₹ 80,000, கடனாளிகள் ₹ 18,000, சரக்கிருப்பு ₹ 33,000.

தேவையான பேரேட்டுக் கணக்குகளை தயார் செய்து கூட்டாளி சேர்ப்பிற்கு பின்வரும் இருப்புநிலைக் குறிப்பினை தயார் செய்யவும்.

(a) Akash, Bala, Chandru and Daniel are partners in a firm. There is no Partnership deed. How will you deal with the following ?

(i) Akash has contributed maximum capital. He demands interest on capital at 10% per annum.

(ii) Bala has withdrawn ₹ 3,000 per month. Other partners ask Bala to pay interest on drawings @ 8% per annum to the firm but Bala did not agree to it.

(iii) Akash demands the profit to be shared in the capital ratio. But others do not agree.

(iv) Daniel demands salary at the rate of ₹ 10,000 per month as he spends full time for the business.

(v) Loan advanced by Chandru to the firm is ₹ 50,000. He demands interest on loan @ 12% per annum.

**OR**

(b) The following is the balance sheet of James and Justina as on 1.1.2017. They share the profits and losses equally.

| **Liabilities** | **₹** | **₹** | **Assets** | **₹** |
|---|---|---|---|---|
| Capital accounts | | | Building | 70,000 |
| James | 40,000 | | Stock | 30,000 |
| Justina | 50,000 | 90,000 | Debtors | 20,000 |
| | | | Bank | 15,000 |
| Creditors | | 35,000 | Prepaid Insurance | 5,000 |
| Reserve Fund | | 15,000 | | |
| | | 1,40,000 | | 1,40,000 |

On the above data, Balan is admitted as a partner with 1/5 share in future profits. Following are the terms for his admissions.

(i) Balan brings ₹ 25,000 as capital.

(ii) His share of goodwill is ₹ 10,000 and he brings cash for it.

(iii) The assets are to be valued as under :

Building ₹ 80,000, Debtors ₹ 18,000, Stock ₹ 33,000.

Prepare necessary ledger accounts and the balance sheet after admission.

45. (அ) பின்வரும் விவரங்களைக் கொண்டு ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(i) பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 50,000.

(ii) சாதாரண இலாப விகிதம் 10%.

(iii) 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹ 13,000, ₹ 15,000 மற்றும் ₹ 17,000.

(iv) 3 ஆண்டுகளில் 10% வட்டி வீதத்தில் ₹ 1 -ன் தற்போதைய ஆண்டுத்தொகை மதிப்பு ₹ 2.4868.

**அல்லது**

(ஆ) முத்து வரையறு பங்கு ஒன்று ₹ 10 வீதம் 50,000 பங்குகளை பின்வருமாறு செலுத்தும் வண்ணம் வெளியிட்டது.

விண்ணப்பத்தின் மீது ₹ 2, ஒதுக்கீட்டின் மீது ₹ 4, முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீது ₹ 4.

1,000 பங்குகள் வைத்துள்ள ஒருவர் அழைப்புத் தொகையை செலுத்தவில்லை. இதைத்தவிர ஏனைய அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. அழைப்பு நிலுவை கணக்கினைப் பயன்படுத்தி குறிப்பேட்டு பதிவுகள் தருக.

(a) From the following information, compute the value of Goodwill as per Annuity Method.

(i) Capital employed ₹ 50,000.

(ii) Normal rate of return 10%.

(iii) Profits of the years 2016, 2017 and 2018 were ₹ 13,000, ₹ 15,000 and ₹ 17,000 respectively.

(iv) The present value of annuity of ₹ 1 for 3 years at 10% is ₹ 2.4868.

**OR**

(b) Muthu Ltd. issued 50,000 shares of ₹ 10 each payable as follows ;

₹ 2 on application, ₹ 4 on allotment, ₹ 4 on first and final call.

All money were duly received except one shareholder holding 1,000 shares failed to pay the call money. Pass the necessary journal entries for calls by using calls in arrear account.

**46.** (அ) சதீஷ் மற்றும் சுதன் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 4 : 3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். 2018 ஏப்ரல் 1 அன்று சசி என்பவரை கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டனர். சசி கூட்டாண்மையில் சேர்ந்த அன்று நிறுவன ஏடு நற்பெயர் மதிப்பினை ₹ 35,000 என்று காட்டியது. மாறுபடும் முதல் முறையில் பராமரிக்கப்படுவதாக கருதி தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். கூட்டாளிகள் பின்வரும் முடிவினை எடுத்தனர்.

(i) ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுவது.

(ii) ஏட்டில் உள்ள நற்பெயர் ₹ 21,000 மட்டும் போக்கெழுதுவது. விடுபட்ட தகவல்களை நிரப்புக.

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| ________ | சதீஷின் முதல் க/கு ப<br>சுதனின் முதல் க/கு ப<br>நற்பெயர் க/கு<br>( ) | | ________<br>________ | ________ |
| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
| ________ | ____________ க/கு ப<br>____________ க/கு ப<br>____________<br>( ) | | 12,000<br>9,000 | ________ |

**அல்லது**

(ஆ) அப்துல் வரையறு நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 50,000 பங்குகளை வெளியிட்டது. அனைத்துத் தொகையும், விண்ணப்பத்துடன் செலுத்துமாறு பின்வரும் நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவினை தரவும்.

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்,

(ii) பங்கொன்று ₹ 3 முனைமத்தில் வெளியிட்டால்

(a) Sathish and Sudhan are partners in a firm sharing profits and losses in the ratio of 4 : 3. On 1st April 2018, they admitted Sasi as a partner. On the date of Sasi's admission, goodwill appeared in the books of the firm at ₹ 35,000. By assuming fluctuating capital account, pass the necessary journal entry if the partners decide to :

(i) Write off the entire amount of existing goodwill.

(ii) Write off ₹ 21,000 of the existing goodwill.

Complete the following journal entries by filling the missing information.

| Date | Particulars | L.F. | Dr ₹ | Cr ₹ |
|---|---|---|---|---|
| __________ | Sathish's Capital A/c Dr | | __________ | |
| | Sudhan's Capital A/c Dr | | __________ | |
| | To Goodwill | | | __________ |
| | ( ) | | | |

| Date | Particulars | L.F. | Dr ₹ | Cr ₹ |
|---|---|---|---|---|
| __________ | __________________ A/c Dr | | 12,000 | |
| | __________________ A/c Dr | | 9,000 | |
| | __________________ | | | __________ |
| | ( ) | | | |

**OR**

(b) Abdul Ltd. issues 50,000 shares of ₹ 10 each payable fully on application. Pass Journal entries if share issued (i) at par (ii) at a premium of ₹ 3 per share.

**47.** (அ) தேவி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து சரக்கிருப்பு சுழற்சி விகிதம் மற்றும் சரக்கிருப்பு மாற்றுக் காலத்தையும் (மாதங்களில்) கணக்கிடவும்.

| **விவரம்** | ₹ |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 12,00,000 |
| அவ்வாண்டின் தொடக்கத்தில் சரக்கிருப்பு | 1,70,000 |
| அவ்வாண்டின் இறுதியில் சரக்கிருப்பு | 1,30,000 |
| அவ்வாண்டில் மேற்கொண்ட கொள்முதல் | 6,90,000 |
| உள்தூக்கு கூலி | 20,000 |

**அல்லது**

(ஆ) இரத்னா, பாஸ்கர் மற்றும் இப்ராஹிம் ஆகிய கூட்டாளிகள் 2 : 3 : 4 என்ற விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2018 டிசம்பர் 31 அன்று இரத்னா இறந்து விட்டார். அவருக்குச் செலுத்த வேண்டிய இறுதித் தொகை ₹ 1,00,000 வரவு இருப்பினைக் காட்டியது. கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவுகளை தரவும்.

(i) சேர வேண்டியத் தொகை உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

(ii) சேர வேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை.

(iii) ₹ 60,000 காசோலை மூலம் உடனடியாக செலுத்தப்பட்டது.

(iv) இறந்து போன கூட்டாளிக்கு (இரத்னா) செலுத்த வேண்டிய தொகை யாருக்கு செலுத்தப்பட வேண்டும் ?

(a) From the given information calculate the inventory turnover ratio and inventory conversion period (in months) of Devi Ltd.

| Particulars | ₹ |
|---|---|
| Revenue from operations | 12,00,000 |
| Inventory at the beginning of the year | 1,70,000 |
| Inventory at the end of the year | 1,30,000 |
| Purchases made during the year | 6,90,000 |
| Carriage inwards | 20,000 |

**OR**

(b) Ratna, Baskar and Ibrahim are partners sharing profits and losses in the ratio of 2 : 3 : 4 respectively. Ratna died on 31st December 2018. Final amount due to her showed a credit balance of ₹ 1,00,000. Pass journal entries if;

(i) The amount due is paid off immediately by cheque.

(ii) The amount due is not paid immediately.

(iii) ₹ 60,000 is paid immediately by cheque.

(iv) To whom the amount due to deceased partner (Ratna) will be given ?

**- o 0 o -**